**மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது

தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) கடந்த ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்த நிதி நிலமைக் கூற்றில் ரூபா 35,913,476 ஆன சொத்துக்கள் மற்றும் ரூபா 5,773,355 ஆன பொறுப்புக்கள் குறைந்து காண்பிக்கப்பட்டமை மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றில் | 2024 ஆம் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது ஒப்பீட்டு ரீதியான பெறுமதிகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள தவறுகளை சரிசெய்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 45,464,689 ஆன மிகை குறைத்து காண்பிப்பதற்குரிய இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் பிழைகள் சரிசெய்யப்பட்டு முன்னைய ஆண்டுக்குரிய ஒப்பீட்டுரிதியான பெறுமதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் பயன்படுத்தப்பட்ட கிரய சூத்திரங்களை உள்ளடக்கிய இருப்புக்களை கணிப்பிடும் போது பயன்படுத்தப்பட்ட கொள்கை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் ரூபா 13,898,485 மிகுதி இருப்பு தொடர்பாக அந்த வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 1,312,200 ஆன மிகுதி இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இறுதியிருப்பின் பெறுமதி கணக்கீடு செய்வதற்கு உரிய குறிப்புக்கள் 2024 ஆம் ஆண்டின் போது பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டிற்குரிய பெறுமதியில் ஒப்பீட்டு ரீதியான பெறுமதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சகல இருப்புக்களும் கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன் இருப்புக்களை அளவிடும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மூலதன மாணியத்தின் கீழ் கிடைக்கப் பெற்ற ரூபா 7,800,000 தொகையில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,422,096 தொகை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் நிதிச் செயலாற்றல் கூற்றில் மூலதன மாணியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் நிதி நிலைமைக்கூற்றில் பிற்போட்ட வருமானத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | திறைசேரியிலிருந்து கிடைத்த மொத்த மூலதன மானியப் பெறுமதியில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்ட பெறுமதி குறைக்கப்பட்டு ஆண்டின் மிகை கணக்கீடு செய்யப்பட்ட மையால் அந்த சேமிப்பு மாத்திரம் செயலாற்றல் கூற்றில் மூலதன மானியமாக காண்பிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் மூலதன மானியங்கள் நிதி செயலாற்றல் கூற்றில் வருமானமாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது வருமானம் 04 வருமான தொகுதிகள் தொடர்பாக உரிய பிரிவுகளில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் வருமானத்தின் கூட்டுமொத்தம் ரூபா 10,151,500 ஆக இருந்த போதிலும் நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் அந்த வருமானம் ரூபா 8,812,710 ஆனமையால் மீளாய்வாண்டின் வருமானத்தில் ரூபா 1,338,790 இணக்கமின்மை காணப்பட்டது. | 04 வருமானத் தொகுதிகளில் மாற்றங்களுக்கான காரணங்களைக் பரீட்சித்து அறிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேகரிக்கப்படுகின்ற வருமானங்கள் தொடர்பாக சரியான அறிக்கை வைத்துக் கொள்வதற்கும், நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு முன்னர் உரிய பிரிவுகளின் மூலம் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 04 வெளி நிறுவனங்களுக்காக சான்றிதழ் பத்திரம் விநியோகிப்பதற்காக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய ரூபா 11,090,000 கணக்கீடு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் மிகை மற்றும் கிடைக்க வேண்டிய வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உடனடியாக பரீட்சித்து கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது பெறவேண்டிய வருமானங்களை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க அச்சக திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய மீதியான ரூபா 14,479,985 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பெறுமதி தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | வெளிவாரி நிறுவனங்களுக்காக செலுத்த வேண்டிய பணத்தை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக் கொண்டு கணக்கீடு செய்வதற்கு |

நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| பெற வேண்டிய மீதி | 40,363,399 | 9,699,000 | 30,664,399 | உரிய நிறுவனங்களுக்கு அறிவித்து பணத்தை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரியான வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை.**

| விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (NVQ) நிகழ்ச்சித்திட்ட செலவினத்தின் கீழ் பரீட்சைக் கட்டணம் | 24,322,926 | செலவின வகைப்படுத்தல் மற்றும் 2023 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்ட வினாப் பத்திரங்கள் மற்றும் ஏனைய அச்சிடல் பொருட்கள் மற்றும் அவற்றிற்காக செலுத்தப்பட்ட பெறுமதிகள் தொடர்பான தகவல்கள் | தேசிய தொழிற் தகைமை பரீட்சை செலவினம் ஒரு செலவினத் தலைப்பாக இருக்க வேண்டியிருந்த போதிலும் எதிர்வரும் ஆண்டின் போது இந்த செலவினங்களை மேலும் விரிவாக இந்த செலவினத்தின் உப குறிப்புக்களாக இறுதிக் கணக்குகளில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய செலவினங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான சான்றுகள் விரிவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

| சட்டங்கள் விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| i. நிதிப் பிரமாணம் | காசாளர் மற்றும் கணக்காய்வில் | | நிதிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 156(i)(ஆ) மற்றும் 322(1) ஆம் பிரமாணங்கள். | பண அறவிடுபவர்களின் ஆவண அறிக்கைகள் நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவில் சில சந்தர்ப்பங்களில் அவர்களிடம் காணப்பட்ட பணப் பெறுமதி குறித்துரைத்தவாறு வெளியிடக்கூடிய வகையில் காசேடு நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. | சுட்டிக்காட்டப் பட்டுள்ள பிரகாரம் இந்த குறைபாடுகளை மாற்றியமைப்பதற்காக ஏதாவது சந்தர்ப்பத்தின் போது காணப்பட்ட பணப் பெறுமதியை சரியாக கண்காணிக்கும் தொகுதி ஒன்றை தெரிவு செய்ய வேண்டிய மாற்று வழி தொடர்பாக ஆலோசனை பெற்று பற்றுச்சீட்டு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரமாணத்தின் பிரகாரம் புத்தகங்கள், பதிவேடுகள் நாளதுவரையாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| ii. | நிதிப் பிரமாணம் 319(1) மற்றும் 321 பிரமாணம் | காப்பகங்களில் துணை திறப்புக்கள் முத்திரையிட்டு பாதுகாப்பாக வைக்க வேண்டியிருந்த போதிலும் காப்பகங்களின் திறப்பு தொகுதிகள் இரண்டும் கணக்காய்வு பரிசோதனை மேற்கொள்கின்ற சந்தர்ப்பத்தில் பிரதிப் பணிப்பாளர் (நிதி) இன் பொறுப்பில் காணப்பட்டது. | காப்பகங்களின் திறப்பு தொகுதிகள் உத்தியோகத்தர்கள் இருவரின் பொறுப்பில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதனால் ஒரு உத்தியோகத்தருக்கு மாத்திரம் காப்பகத்தை திறப்பதற்கு முடியாதிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் காப்பகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| iii. | நிதிப் பிரமாணம் 323 பிரமாணம் | 2024 யூலை 15 ஆம் திகதி கணக்காய்வு உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக காசு பரிசோதனையின் போது ரூபா 345,651 காசு பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | கணக்காய்வின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு கையளிக்கப் பட்டதுடன் அந்த பிரிவிலிருந்து வழங்குகின்ற ஆலோசயையின் படி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| iv. | நிதிப் பிரமாணம் 325 | சகல நிதி தொடர்பிலும் ஒரு தரப்பினரால் மாத்திற்கு ஒரு தடவை முழுமையாக துரித சரி பிழை பார்த்தல் மேற் கொள்ள வேண்டியிருந்த போதிலும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளின் போது ஒரு தடவையேனும் பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் மற்றும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் இந்தப் பணிகள் நிறுவனத்தின் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | நிதி முறைகேடாகப் பயன்படுத்துவதை தடுப்பதற்காக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| v. | நிதிப் பிரமாணம் 395 (ஆ)(உ) | காசு அறவிடுபவருக்கு நாளாந்தம் கிடைக்கின்ற பணத்தை வங்கியில் இடாதிருந்ததுடன் சில நிதி மாத இறுதியின் போது வங்கி இணக்கக் கூற்றில் தேறாத வைப்பாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு முறைமைகளின் பிரகாரம் ஆணைக்குழுவிற்கு கிடைக்கின்ற சகல பணத்திற்காகவும் பற்றுச்சீட்டு வங்கிக் கணக்கின் மூலமே விநியோகிக்கப்படுகின்றது. அதன் 2023 திசம்பர் 30, 31 ஆம் திகதிகளில் வார இறுதி நாட்களாக இருந்தமையால் வங்கியில் வைப்புச் செய்யப்படாத நேரடியாக வங்கி கணக்கு ஊடாக பற்றுச்சீட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. | வங்கி இணக்கக்கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும் |
| (ஆ) | 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 3.2(i) ஆம் பந்தி | திறைசேரி அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் ஆணைக்குழுவின் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மீளாய்வாண்டின் போது 16 வகையான படிகளுக்காக கூட்டுமொத்தமாக ரூபா 38,351,005 ஆணைக்குழுவின் | வெளியக மற்றும் உள்ளக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படுகின்ற படிகளுக்காக உரிய கொடுக்கல் வாங்கல்கள் உள்ளக சுற்றறிக்கை தொடர்பான விபரங்கள் பொது திறைசேரிக்கு சமர்ப்பித்து அதற்காக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிகப் படிகளை பெற்றுக்கொள்ளும் போது சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் அந்த பணிகளுக்காக பதிவுசெய்த வெளி நபர்களுக்கும் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2016 பெப்ரவரி 26 ஆந் திகதிய இலக்கம் MSDVT/SSDP/2016-1 என்ற திறன் அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | NVQ 1 முதல் 6 வரை பாடநெறிகள் நடாத்துகின்ற சகல நிறுவனங்களினாலும் 2017 ஆம் ஆண்டில் இருந்து தர முகாமைத்துவ முறைமை ஒன்று ஸ்தாபித்தல் கட்டாயமாக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டுக்கு பின்னர் எந்தவொரு நிறுவனமும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காதிருகக்வில்லை. ஒழுங்குபடுத்துதல் நிறுவனமாக செயற்படுகின்ற ஆணைக்குழு இது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | 2024.05.13 ஆந் திகதி முதல் தர முகாமைத்துவ முறைமையொன்றை ஸ்தாபிக்கும் பணிகளுக்காக தனிப்பட்ட பிரதி பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் முதலாவது நிகழ்ச்சித் திட்டம் 2024.07.25 ஆம் திகதி நடாத்தப்பட்டிருந்தது. | NVQ பாடநெறிகளின் தரத் தன்மையை பாதுகாப்பதற்காக தர முகாமைத்துவ முறைமை யொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் ஒழுங்குபடுத்துதல் நிறுவனமாக அதிக கவனம் செலுத்துதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,065,996 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 23,722,454 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 12,656,458 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிகழ்ச்சித் திட்ட செலவினம் (NVQ) மற்றும் பெறுமானத் தேய்வு செலவினம் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு சட்டத்தின் 2 ஆம் பந்தியின் 11 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டு 32 வருடங்கள் கடந்திருந்த போதிலும் இந்த நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்ட அடிப்படை நோக்கங்களில் ஒன்றான தேசிய தொழிற்கல்வி அபிவிருத்தி திட்டங்கள் தயாரித்து வர்த்தமானியில் பிரசுரிக்கும் பணிகள் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் நிறைவேற்றுவதற்கு ஆணைக்குழு தவறியிருந்தது. | அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படுகின்றது. | நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டதன் அடிப்படை நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2023 ஆம் ஆண்டின் போது தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபையினால் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட முறைமைக்கு புறம்பாக மாணவர்களை பதிவு செய்தல், பாடநெறிகளை பதிவு செய்தல், தேசிய திறன் சான்றிதழ் (NVQ) விநியோகித்தல் போன்ற நடவடிக்கைகளில் மேற்கொண்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தியதன் காரணமாக 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலைக்கல்வி மற்றம் தொழிற்கல்வி சட்டத்தின் 10(3)(அ) பிரிவின் பிரகாரம் | EBT முறையின் கீழ் பாடநெறிகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்பட்ட பின்னர் சகல மாணவர்களினதும் தகவல்கள், தகவல் முறைமையில் உள்ளடக்குமாறு NAITA நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்ட போதும் NAITA நிறுவனத்தின் மூலம் உரிய தகவல்கள் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட வில்லை. | ஆணைக்குழுவின் மூலம் ஒழுங்குபடுத்தப் படுகின்ற அரச நிறுவனங்களின் செயற்படு நிலை தொடர்பாக கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆணைக்குழுவினால் சரியான முறையில் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | தேசிய தொழிற் தகைமை மட்டத்திற்கான தரத்தை பெற்றுக்கொள்வதற்கு தேவையான நிர்வாகத் தகைமை (Certificate for Telecommunication Technician) பாடநெறிக்காக பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக தரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. எனினும், அந்த பாடநெறி முடிவடைந்து ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்த பின்னர் நிர்வாகத் தகைமை மட்டம் அடையப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்தி தரத்தினை வழங்கியிருந்தமையால் பாடநெறி தரப்படுத்தல் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | தற்போது NAITA நிறுவனம் பாடநெறிகளை உரிய சரியான மட்டத்தில் அடைந்து கொள்ளலின் தரம் பெற்றுக்கொள்ளப்பட் டுள்ளதுடன் இந்தப் பாட நெறியில் தற்போது பயிற்சி முடிவடைந்துள்ள 03 தொகுதிகளுக்காக தரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னர் பரீட்சை நடாத்தி சான்றிதழ் விநியோகிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். | பாடநெறி நடாத்தப்படுகின்ற நிறுவனத்தால் தேசிய தொழில் தகைமை மட்டத்திற்காக தரத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகைமைகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2023 செப்தெம்பர் 01 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்ட பிரகாரம் மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு சட்டத்தை திருத்தும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் இன்றி நடாத்திச் செல்லப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்வதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கு ஆலோசனை வழங்கப் பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிறுவனத்தை பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற ஒழுங்குபடுத்தல் பணிகளை நிறைவேற்றக்கூடிய வகையில் அமுல்படுத்துவற்கு தேவையான சட்ட ரீதயான விடயங்களைத் தயாரிப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல வேண்டும். |
| (உ) | ஆணைக்குழுவின் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவினால் 2013 ஆம் ஆண்டின் போது | 2023 ஆம் ஆண்டில் முதலாவது காலாண்டில் மேல் | மேல் மாகாணத்திற்காக தொழில் கல்வி பயிற்சி திட்டமொன்றைத் |

| | | | |
|---|---|---|---|
| | மேல் மாகாணத்திற்காக தொழிற்கல்வி பயிற்சி திட்டம் ஒன்றை தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் திட்டத்தை தயாரிப்பதற்கு தவறியிருந்தது. | மாகாண தொழில் கல்வி பயிற்சி திட்டமொன்றைத் தயாரித்து ஆரம்பிக்கப்பட்ட துடன் ஆரம்பிக்கப்பட்ட தரவுகளை சேகரித்தல் 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | தயாரிப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | திறன் தரத்தை தயாரிப்பதற்காக வெளி நிறுவனங்களினால் வைப்புச் செய்யப்பட்ட பணத்தை உள்ளடக்கி மீளச் செலுத்த வேண்டிய குறுங்கால மானியம் ரூபா 5,155,322 ஆக இருந்ததுடன் அதில் வைப்புச் செய்து 05 வருடங்களை விஞ்சிய ரூபா 1,426,918 காணப்பட்டதுடன் இந்த பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 05 வருடங்களை விஞ்சிய மீளச் செலுத்த வேண்டிய கணக்கில் உள்ள ரூபா 1,426,918 தொகை 2024 ஆம் ஆண்டின் போது முன்னைய ஆண்டின் சீராக்கக் கணக்கின் மூலம் வருமானமாக கருதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | மீளச் செலுத்த வேண்டிய குறுங்கால மானியங்களை தீர்த்துவைக்காமைக்கான காரணத்தை கண்டறிந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 மார்ச் வரையில் ஆணைக்குழுவில் பதிவு செய்திருந்த நிறுவனங்களுக் கிடையே பதிவு காலாவதியாகி 20 வருடங்களுக்கு மேற்பட்ட 16 நிறுவனங்கள், 05 இற்கும் 05 வருடங்களுக்கும் 20 வருடங்களுக்கும் இடையிலான காலம் கடந்திருந்த 486 நிறுவனங்கள் தொடர்பாகவும் ஆணைக்குழு சட்டத்தின் 14(1), 15(1), உப பிரிவு மற்றும் 10(3)(அ) பிரிவுகளின் பிரகாரம் பதிவினைப் புதுப்பித்துக் கொள்வதற்காக விண்ணப்பித்திருக்கவில்லை. மேலும் அந்த நிறுவனங்களில் மீண்டும் பதிவைப் புதுப்பிக்காமல் தொழில் பயிற்சி நடவடிக்கைகளை நடாத்திச் செல்கின்றமையை பரீட்சிப்பதற்காக | மூடப்பட்டுள்ள நிறுவனங்கள் யாவும் பொது மக்களுக்கு அறிந்து கொள்வதற்காக “close’ எனக் குறிப்பிட்டு ஆணைக்குழுவின் இணைய தளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள் ளது. பதிவினைப் புதுப்பிப்பதற்கு விண்ணப்பித்திருந்த போதிலும் தேவையான நியதிகளை பூர்த்தி செய்யாதுள்ள | பதிவு காலாவதியாகிய நிறுவனங்களின் பதிவினை புதுப்பிப்பதற்கோ அல்லது பதிவினை நீக்குவதற்கோ நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது டன் பதிவினைப் புதுப்பிக்காத நிறுவனங்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | எந்தவொரு வேலைத்திட்டமும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2016 ஆம் ஆண்டு முதல் 2022 வரை 36 நிறுவனங்கள் பதிவினை புதுப்பித்துக் கொள்வதற்காக விண்ணப்பித்திருந்த போதிலும் 2024 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் அந்த நிறுவனங்கள் பதிவினை புதுப்பித்திருக்கவில்லை. | நிறுவனங்களுக்கு குறைபாடுகளை பூர்த்தி செய்து மீண்டும் மதிப்பிடுவதற்காக விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | எடுக்கக்கூடிய வகையில் சட்டங்கள் வழங்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆணைக்குழுவினால் பாடநெறி நடாத்துவதற்கு தற்காலிகமாக தடைசெய்யப்பட்ட நிறுவனங்கள் ஆணைக்குழுவின் கட்டளையை கவனத்திற் கொள்ளாமல் பொதுவான பிரகாரம் தமது கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தது. | தற்காலிக பதிவு கைவிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு எச்சரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் அவ்வாறு இல்லாத நிறுவனங்களின் பதிவினை இரத்துச் செய்வதற்கு நடடிவக்கை எடுக்கப்படுகின்றது. | ஒழுங்குபடுத்துதல் நிறுவனத்தினால் நிறைவேற்ற வேண்டிய பணிகளை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |